அண்ணாமலையார் துணை.

ஸ்ரீ துர்க்காம்பாள் பதிகமும், கும்மியும்.

கோட்டையூர் வித்வான்
சுப்பிரமணிய அய்யரால்
இயற்றப்பட்டு

க. வீ. அள. மு. ராமநாதன் செட்டியார் அவர்களின்
பொருளுதவியால்

சென்னை
ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1930.

அண்ணாமலையார் துணை.

ஸ்ரீ துர்க்காம்பாள் பதிகமும், கும்மியும்.

கோட்டையூர் வித்வான்
சுப்பிரமணிய அய்யரால்
இயற்றப்பட்டு

க. வீ. அள. மு. ராமநாதன் செட்டியார் அவர்களின்
பொருளுதவியால்

சென்னை
ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1930.

உ

அண்ணுமலையார் துணை.

ஸ்ரீ துர்க்காம்பாள் பதிகமும், கும்மியும்.

சிறப்புப் பாயிரம்.

உலகிற் புகழ்பெற்ற ஸ்ரீ இளையாற்றுக்குடி நித்யகல்யாணி கயிலாய நாதர் திருவடித்தியான பூசகர் ஸ்ரீமான் இராம சாமிக்குருக்களய்யர் கனிட்ட சகோதரர் வரகவி ஸ்ரீபரமேஸ்வர குருக்களய்யர் இயற்றியவை.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பூமருவும் புயல்மருவும் பொழின்மருவுந் தடஞ்செழித்துப்
புணையு மாடம்
கோமருவ முப்போகம் விளைகழனி வளமுடைத்தாய்க்
குலவி யோங்க
நாமருவும் புகழ்படைத்த நலந்தரு பாலத்தளியாம்
நகர்வாழ் சோதி
மாமருவும் வளைதிகரி மலர்கரத்தாள் வனமாலி
வரதை மன்னே. (1)

கனம்படைத்த வடிவுடையாள் கருணைபொழி கடலனையாள்
கம்பு கண்டி
இனம்படைத்த கடவுளர்கட் கேற்றவரந் தருசிவைபொன்
னிணைபூந் தாளை
மனம்படைத்த அடியவர்க்கு வாழ்வளிக்குந் துர்க்காம்பாள்
மகிமைக் கேற்ற

தனம்படைத்த பதிகமொடு திருக்கும்மியும் பெருக்கமுடன்
சாற்ற வென்றே. (2)

யான்புரிந்த மொழிகடவா தமலமிகு பாமாலை
யறத்தார் போற்றும்
மான்புரிந்த விழியுடையெம் மாதங்கி கருணைதர
வளத்தாற் செய்தான்
தேன்புரிந்த மொழிமடவார் வளர்மாடக் கோட்டையூர்
செழிக்கு மேலோன்
வான்புரிந்த சுப்ரமண்ய கவிவரத னவன்பெருமை
வழுத்தற் பாற்றே. (3)

நேரிசை வெண்பா.

பாலத் தளிப்பதிவாழ் பன்னுதுர்க்காம் பாள்பதிகம்
சீலத் தளித்தகும்மி செப்பினன் கோலத்தார்
விப்ரகண்யன் கோட்டையூர் மீனாட்சி சுந்தரன்சேய்
சுப்ரமண்யன் நாட்டமிகுத் து.

விநாயகக் கடவுள்

சீராருந் தேவிதுர்க்கை செந்தமிழாற் சேர்பதிகம்
நேராரும் பாச்சொல் நிரம்பவே பேராரும்
தம்பிக்கை யானையெனச் சார்ந்து மணமுடித்த
தும்பிக்கை யானை துணை.

வயிரவமூர்த்தி

கொந்தணையும் வந்தணையும் சந்தமலி சோலையொடு
கோலஞ் சாலும்
நந்தணையும் பண்ணை திகழ் நலமுறு பாலத்தளியாம்
நகர்க்கண் ணுட்டும்
இந்தணையும் சிகரநிறை சிகரிநிறை தளிமேவி
இமையோர் போற்றும்

அந்தணனும் வடுகனடி முடிக்கணிந்து வினைக்குவிடை
யளிப்பா மன்றே. (1)

சூலத்தாம் படையுடையான் துதிதரு கபாலமொடு
தோன்றுந் தேவன்
பாலத்தாம் விழியுடையான் பரந்தரு தாரகமந்த்ரம்
பகரும் ஆசான்
ஆலத்தாம் களமுடையான் கேத்திரபாலன் அருட்கண்
அமர்ந்த சோதி
சீலத்தாம் திருமறையோன் அருள்வடுகன் திருவடியைச்
சிரத்திற் சேர்ப்பாம். (2)

ஸ்ரீ துர்க்காம்பாள் பதிகம்.

மணிகொண்ட கடலாடை யணிகொண்ட புவனியெனு
மங்கைமிகு துங்கவதன
மதியனைய நிதியினொடு பலவளமு நிலவளமும்
வளர்பொழில்கள் சுலவுமெழிலும்
கனிகொண்ட குழலிசையி னினிதென்று புகலரிய
கவின்மிஞ்சு மொழியராடக்
கண்கண்டு குவளைகண் முகிழ்த்திடவு மதிமுகங்
கண்டுகம லங்கூண்மலர
அணிகொண்ட மணிகளொடு கமலநிரை தடமருவி
யதிகசுந் தரமங்கைமார்
அகமகிழ்வி னொடுபயிலு மணிமாட நிறைகொண்ட
அழகுதிகழ் நகரினொளியாய்த்
திணிகொண்ட சிகரிநிறை தெய்வால யத்தின்வளர்
செல்வியே யென்னையாள்வாய்
சீலத் தவர்க்கருள்செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கையுமையே. (1)

சங்கேறு சக்கரஞ் சாரங்க மணிதண்டு
தனிவாண்முதற் படைகளாற்
சந்தமலி செங்கையன் பங்கயற் கந்தமறை
சாற்றிய விகங்கவமலன்
கொங்கேற மெத்துமிதழ் பங்கேருகத்தினுள
கொம்பேற நத்துமகலன்
கோவிந்தனச்சுதன் கோநந்தன் மெய்ச்சுதன்
கோதண்டன் மெச்சுதலைவி
சங்கார வாள்கொண்ட வுங்காரியார் கொண்ட
தங்கேறு வாரிடையினுள்
சங்கரனு டன் றிருநடம்புரி தடங்கணுமை
சந்ததம் நிறைந்தபுகழாள்
சிங்கார மதுரமொழி யங்காளி கருணைபொழி
செஞ்சோதி யென்னையாள்வாய்
சீலத்தவர்க்கருள் செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியேதுர்க்கை யுமையே. (2)

விண்ணின்மலர் பண்ணவர்கள் மண்ணுலக விண்ணவர்கள்
விசையமுறு சுமுகமுனிவர்
வித்தமென வைத்ததவ முத்தர்பரி சுத்தர்சிவ
விமலமறை யவர்களமலர்
எண்ணின்வளர் மோனநிலை நண்ணிவளர் ஞானநிலை
எண்ணரிய தானகலையே
இகபர மளிக்குமொரு கருணைநிறை வுற்றகடல்
இயமனை யுதைத்தகழலான்
கண்ணுதற் கொருசத்தி பெண்ணுகைக் குலிசத்தி
கண்ணருட் குயரத்தியே
கதிர்மிக்க மதியொத்த துதிபெற்ற வதனத்தி
கனமுற்ற சுருதிப்பொருள்

திண்ணி யவலத்தனும் பண்டாசு ரனைவென்ற
திருமங்கை யென்னையாள்வாய்
சீலத் தவர்க்கருள்செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கையுமையே. (3)

உத்துங்க மத்தகச மொத்துங்க னத்தன
வொண்டொடியர் தண்டையடியர்
உயர்வதன மதியிலே மதுரமது மொழியிலே
ஒளிசெய்அயி லெனும்விழியிலே
கத்தும் பயக்கடலி னத்துந் திறத்தமுத
களிமருவு சாயல்தனிலே
கனமருவு குழலிலே மனமருவு மெழிலிலே
காமர்தநு வாசமதிலே
முத்துங்க னத்தநவ ரெத்னங்கண் வைத்தவட
முலைமுன்றி னிலையொன்றிலா
மோகநிறை யிடையிலே வாகுபெறு துடையிலே
முகிலனைய பிடிநடையிலே
சித்தங் களைத்துமயல் வைத்தங் கிளைத்துமுயல்
சிறியேனை யாள்வையம்மா
சீலத் தவர்க்கருள்செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கையுமையே. (4)

கருதரியதுரியநிலை தருபரம வரதைநிறை
கமலமுறை கமலமலர்வாழ்
கலைவல்லியலைவல்லி மலைவல்லி புகழ்தல்லி
கடல்வண்ணநிறை செல்வியே
விருதிநெடு வருகொடிய வசுரர்மடிதர வடல்செய்
விசயமுறு புயவசலையே
விதிபுரந்தரன் முதல துதி சிறந்திடுமமரர்
மிகவணங்கிட வருள்செயும்

குருமருவு மங்கையே தருணநிறை நங்கையே
குமரியருள் பொழிகொண்டலே
குங்குமபயோதரீ சங்கரி மனோகரீ
கொந்தளவி னேதமயிலே
திருமறைகள் தேடரிய பரன்மகிழ்செய் மாதுரிய
சிறியனெனை யாள்வையம்மா
சீலத்தவர்க்கருள் செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கை யுமையே. (5)

மங்களகல் யாணிசிவை கொந்தளக வேணியருள்
மஞ்சுளமதான மயிலே
வரமருவு சுரர்முனிவர் தரமருவு சரணயுக
வனசமலர் பணியவருள்செய்
திங்களணி செஞ்சடிலர் பங்கின்மலர் மங்கையருள்
திருமருவு துரியமணியே
செந்தமிழ்க் கவிவாணர் சிந்தையுற் றருள்வாணி
செஞ்சடைக் கவுமாரியே
சங்களவு செங்கையொடு பங்கமலரங்கமல
சததளத்திடை மேவுமோர்
தாயேபுராதனீ மாயே மனோன்மணி
சகலசகதலமும் அருளும்
சிங்கவா கனிதருண மங்கைமோ கினி நெறியில்
சிந்தையே னென்னையாள்வாய்
சீலத்தவர்க் கருள்செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கை யுமையே. (6)

மாதவர்க ளாதிசிவ வேதியர்க ளோதிபெறு
மவுனர்தவ யோகவிரதர்
மகுடதட முடிமிடைகொள் வானவர்கள் மேனிலையர்
வழிபடவிளங்கு முகிலே

ஆதவனை சோதிபுனை பாரத்துவாச முனி
அமலகோத் திரவிமலராம்
அனகரைக் காத்தருள்செய் அந்தரிசுந்தரீ
அணிகங்கை யணிமங்கையே
வேத வேதாந்தமணி சோதிமா சாந்தமணி
வித்தகியறத்தை நாட்டும்
மேதகு பரங்கருணை நீதிநிறை யாதிபரை
வேணுகா னத்திேனுங்கும்
சீதரன் சோதரீ மாதருன் பாதமலர்
சிந்தைசெய வந்தருள்செய்வாய்
சீலத்தவர்க்கருள் செய் பாலத்தளிக்குள் வளர்
தேவியே துர்க்கையுமையே. (7)

சங்கரிதிகம்பரி நலந்தரு த்ரியம்பகி
சதானந்தி முனிவரிதயத்
தானத்தினமர் சோதி ஞானத்தை யருளாதி
சானத்தர் பெறுமோதியே
புங்கவி புராதனிபொன் மங்களகல்யாணி சிவை
பொங்குதவ யோகரமுதே
புவன கோடிகளையருள் தவிஜோதியர் பணிசெய்
புகழ்செய்மாதவர் புரிவிலாம்
தங்கமலை வில்லியொரு பங்கமலை வல்லிவளர்
சாம்பவிதயா நிலையமே
சங்கு சக்கரமருவு செங்கையுற் றிடுவரதை
சங்கையற்றவர் பணிசெயும்
திங்களார் நுதலுனது துங்கமார்பத மெனது
சிந்தைசேர்தர வருள்செய்வாய்
சீலத் தவர்க்கருள் செய்பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கையுமையே. (8)

மந்தாரநீழலுரை யிந்த்ராதி தேவர்பணி
மஞ்சார்பொன் மேனிமயிலே
மங்காத யோகரிதயந் தேறுமோன நிலை
வந்தாளும் ஞானமழையே
கந்தார மோடுபயில் வண்டேறு மாமலரு
கந்தேறு பீடநிலையே
கங்காளி மாதுசிவை யஞ்சாது வாதுபுரி
கந்தேறுயானை யுரிமேல்
செந்தாது கோலி நடனந்தேறு நாதனொடு
சென்றாடு ஞானமணியே
செஞ்சாலி கோலவயல் எஞ்சாது சூழவளர்
தென்பாண்டி ராசன் மகளே
சிந்தாகுலாதி துயர்நைந் தோடவேயுனது
செந்தாளி னோதியருள்வாய்
சீலத்தவர்க்கருள்செய் பாலத்தளிக்குள்வளர்
தேவியே துர்க்கை யுமையே (9)

மருமருவு கமலமலருரை திருவுமுலகுதரு
வரனுவினருள் வாணியும்
மங்களமிகுந்துனது தங்கமிகு புகழ்புனைய
மருவுமாதங்கி சூலி
பெருமையுற்றிடு துரிய நிறைதரித்திடு பெரியர்
பிறழ்தலற்றிடு யோகரும்
பேசா தொடுங்குமொரு பேரறிவி னுயர்திருவர்
பெருமாயை தரமாறியே
கருமருவு துயரமவ ரணுகாது காத்தருள்செய்
கஞ்சலோசனி கௌமாரி
கந்தரத் தொளிமருவு சுந்தரத் தனுவுடைய
கந்தரித்திடு கையமுதே

திருமருவு முனதுபத கமலமல ரெனதுசித
திறமருவு மனதி னருள்வாய்
சீலத்தவர்க்கருள்செய் பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கை யுமையே. (10)

மணிகொண்ட பணிமுடியின் மிசைகொண்ட புடவிமட
மயில்துங்க வதனமெனவும்
மணிமார்பி னுரமதி னடுநாயகங் கொண்ட
மாணிக்க மெனவுமினமார்
அணிகொண்ட வளமண்டு வளர்செல்வ மிகமல்கி
அமுதமிசை குமுதமலர்மேல்
அளிவண்டு துளிகொண்ட மதுவுண்டு களிகொண்ட
அரல்கொண்ட தடமெங்குமாய்க்
கணிகொண்ட மணமண்டு மலர்கொண்ட பொழில்கொண்டு
காமர் முப்போகம் விளையும்
கடைசியர்க ளிடைதுவள நடவினொடு குரவையிடு
கழனிபுடை சுலவநிலவும்
திணிகொண்ட மணிமாட நகர்வளர்செய் சோதியே
சிறியேனை யாள்வையம்மா
சீலத்தவர்க்கருள் செய்பாலத் தளிக்குள்வளர்
தேவியே துர்க்கை யுமையே. (11)

ஸ்ரீ துர்க்காம்பாள் பதிகம் முற்றிற்று.

ஸ்ரீ துர்க்காம்பாள் கும்மி.

உலகங்களி னிலவும் புகழோங்கிய துர்க்கையென்
றோதும் சிவைமேற் கும்மிப்பாடத்
திலகநுதற் கயவாரண வதனமுடைக் கணநாயக
தேவன் மலர்ப்பதங் காப்பாமே. (1)

பாலத்தளி மேலுற்றருள் பாலித்திடு கோலக்குழை
பைந்தொடி துர்க்கைமேற் பாட்டுரைக்க
ஆலத்தளிர் மேலுற்றவ னுதிப்பரன் மால்பொற்புடை
அண்ணல்பொற் பாதத்தை யெண்மனமே. (2)

கயலேர்விழி குயிலார்மொழி கவின்மேவிய மதிவாணுதல்
கந்தரி மேற்கும்மிப் பாட்டுரைக்க
அயிலேறுகை மயிலேறிய வருண்மேவிய முருகேசனும்
ஆதிக் கடவுள் பதந்துணையே. (3)

சீலத்தவ ராலற்புறு பாலத்தளி மேலுற்றுளிர்
தேவி யருட்கும்மிப் பாட்டுரைக்க
வேலைக்கடு கோலக்கள மேவப்பணி தேவர்க்கருள்
வேதப் பொருளரன் றுள்துணையே. (4)

செஞ்சாலி வளஞ்சேர்பணை யெஞ்சாது புறஞ்சூழ்நகர்த்
தேவிதுர்க் காம்பாள் புகழ்பாட
எஞ்சாதறம் துஞ்சாதருள் மஞ்சேர்குழ லம்பாள்சிவை
ஈசனிடங் கொண்டாள் தாள்துணையே. (5)

கொங்கேர்பொழில் சங்கார்பணை கோலித்திகழ் பாலத்தளிக்
கோமளை துர்க்கைமேற் கும்மிசொல்ல
பங்கேருகை சங்கேறுகை பஞ்சாயுத னெஞ்சார்குயில்
பாதமலரைப் பணிவாமே. (6)

மாலுக்கிளை யாண்மெய்த்தவர் வாழ்வுற்றிடு ஞானப்பொருள்
மாதங்கி மேற்கும்மிப் பாட்டுரைக்க
சூலத்தொடு கோலத்துடி மேலுற்றக பாலக்கரன்
சோதி வயிரவன் றுள்துணையே. (7)

புரமங்கிகொள் நகைபொங்கிய பரன்முன்றிரு நடனம்புரி
பூரணி துர்க்கைமேற் கும்மிசொல்லப்
பிரமன்வர னயன்முந்திய வுலகந்தரு பரனண்டர்கள்
பேணும் கழலிணை காப்பாமே. (8)

மதிவாணுதல் துதிமாதவர் மனமாமலர் தனின்மேவிய
மங்கள துர்க்கைமேற் பாட்டுரைக்க
விதிநாவளர் நிதிநாயகி கலைவாணித னருண்மாமது
மேவு மலர்ப்பதங் காப்பாமே. (9)

கனமார்குழல் தனமாமலை கமலாசனி யெமையாள்தரு
கந்தரி துர்க்கை புகழ்பாட
தநுமானடி மனதாய்வரு மநுமானிரு சரணுமலர்
தாங்குமன்த்தினு லோங்குவமே. (10)

மங்கள வல்லி மரகத வல்லியே
மஞ்சணி யுங்குழல் மாரவல்லி
திங்கள ணிநுதற் சிங்கார வல்லியே
சேம வல்லிபுகழ் காமவல்லி. (11)

சுந்தர வல்லி சுமுகவல்லி புகழ்
தூயவல்லி மிகு நேயவல்லி
கந்தர வல்லி கமலவல்லி புகழ்
கானவல்லி யருள் ஞானவல்லி. (12)

முத்தைத்தரு நகைமேவிய மோகன வல்லியே
மூசுவண் டார்க்குங்கல் யாணவல்லி

சித்தத்தைய டுத்துக்கவர் சிந்தூர வல்லியே
தேசு மிகுந்த சினேகவல்லி. (13)

மங்கைய ரெல்லோரும் வாருங்க ளேயம்மன்
மட்டில் புகழ்த்தமிழ் கூறுங்களே
சிங்கார மாய்க்கும்மி பாடுங்களே புகழ்
சேரும் நாட்டின்வளம் பாருங்களே. (14)

நிரைமாமணி திரைமேவிய கடல்நீர்செறி தருமாமழை
நித்யா னந்தவல்லி நேர்வடிவாய்
தரைமாநகில் தனைநேர்மலை தனிலேபொழி தரமாநதி
தானுகிக் கால்வழி யேபாயும். (15)

செந்நெற் பயிர்கள் செழித்தோங் கும்பணை
செங்கமலங்கள் திளைத்தோங் கும்
கன்னற் கமுகு கனத்தோங்கும் சாலிக்
கதிர்களெங் கெங்கும் கதித்தோங்கும். (16)

நடவிட்டிடு கடைமங்கையர் நகிலிற்செறி தருசேதகம்
நண்ணும் கமலத்திற்பண்ணும் வண்டு
கடிபெற்றிடு மதுவுற்றுண வதின்மொய்த்திடு தலையொத்திடு
காட்சியைப் பாருங்கள் மாதர்களே. (17)

நட்ட நடவிற் களையெடுக் குங்கடை
நங்கையர் கண்ணிழ லங்கயலென்
றிட்ட முடனேவண் டானம்பு குந்தள்ளி
ஏற்றிடும் நாணத்தைப் பார்த்திடுவீர். (18)

கமலங்களி லுறைவண்டுகள் கடைமங்கையர் முகபங்கயம்
கண்டதி லேமது வுண்டிடவே
தமரங்கொடு சுழல்கின்றவை தமையன்பர்கள் விலகும்படி
தங்கைக ளோச்சுவா ரெங்கணுமே. (19)

வள்ளைக் கமலத்தில் வண்டுகள் பாண்செய்யும்
வாசங்கொள் சேற்றிடை யாமைதங்கும்
பள்ளப் பணையிற் பணிலங்கண் முத்தீனும்
பாங்குற்ற சோலை மயிலகவும். (20)

அந்தணர் வேள்வியி னுகும் புகைதனை
ஆமணி மேகம தாமெனவே
சிந்தைகொண் டேகுயில் கூவா தொழிந்திடச்
சேரு மயில்க ணடமாடும். (21)

நெற்கதிர்ப் போர்மலை நேராக் கியதை
நீலக் கரும்பகட் டாலடித்து
வைக்கோ லகற்றிப் பொலிபோட் டுத்தெய்வம்
வாழ்த்திப் பிரித்து மனமகிழ்வார். (22)

பண்டியிற் கொண்டு மனைசேர்த்துப் பின்னர்
பாங்குடன் தெய்வம் விருந்தோம்பல்
கொண்ட பலதரு மங்கள் குலவியே
கோலத் திருநாடு சீலமுறும் (23)

பொன்னுட்டினு மினிதாகிய நன்னுட்டுறு வளமாமிது
போற்றித் தெரிந்தவை சாற்றியுற்றேன்
மன்னுட்டிய வெழின்மேவிய மகிழ்மானகர் வளமானதை
மாதர்களே சொல்வே னுதரவாய். (24)

மின்னற் கொடிகண் மடக்கி யடுக்கியே
மீதுறு மாடத் துகள்துடைத்துப்
பன்னற் கருங்கங்கை நன்னீரை யள்ளித்தேன்
பாகின் மொழியார் தெளிப்பார்கள். (25)

மாடங்களி லாடுங்கொடி மதிமண் டலமதின் மண்டியே
மன்னு மறுவைத் துடைக்குமங்கே

ஓடுங்கயல் விழிமங்கைய ரொளிகொண்டிடு மதியாடியி
னேங்கு நிழல்கண்டு தாம்புனைவார். (26)

மங்கைய ரேறிப் பயில்தரு மாடத்தின்
மட்டின் மரகதக் கட்டின்மலை
அங்கலுழ் மாடத்தின் கொங்கையென் றிங்கித
வாடவர் கூடி நகைப்பார்கள். (27)

தாம நிறைமாடச் சாளரம் பாருங்கள்
தங்கும் விழியென வெங்கு மல்கும்
கோமள மாதர்க ளாடவர் கூடியே
கோதில் வசந்தனைக் காதலிப்பார் (28)

ஓவியப்பு ருவின்மாடி னாடிருக்கும் பேடைகண்டு
ஓங்கிய காமத்தி னேங்கிநைந்தே
ஆவியொத்த சேவல்கூவ அங்கண்வந்த டைந்திடாது
அண்டிநிற் கும்செயல் கண்டிடுவீர். (29)

அந்தணர் வீதியி னந்தியும் சந்தியும்
ஆரண மங்கமோ டாகமங்கள்
சிந்தை களிக்கும் புராணம் பயில்கலைச்
செல்வம் நிறைந்து செழித்தோங்கும், (30)

மன்னவர் துன்னிய மந்திர வீதிகள்
வாரணம் பாய்பரி தேர்முதலா
மன்னு தனுசொடு வாண்முத லாம்படை
வார்ந்து பழகி மகிழ்வார்கள். (31)

நிதிமிக்கன வாணிகர்த்தெரு நிறையாவணம் திரைமேவிய
நித்தில மெத்தொளி மாமணிகள்
அதிகத்தொளி தரல்மெய்ப்பக லளவுற்றிர வகலச்செயு
மானதைப் பாருங்கள் தேன்மொழியீர். (32)

மேழிப் பெருஞ்செல்வங் கோழை படாதென்ற
மேலான வார்த்தை நிலையாகப்

பாழிப் புயத்தர் பலவிருந் தோர்க்கன்னம்
பாலிக்கும் வீதியைப் பாருங்களே. (33)

ஆன்றோர்கள் மாமடஞ் சான்றோர்கள் சேரிடம்
அன்ன சத்திர மருட்சாலை
வான்றோய நீடிய மாடங்கள் கூடங்கள்
வாகன சாலை வளமோங்கும். (34)

அந்தரி சுந்தரி யம்பிகை மாதங்கி
அண்டர் பணிகொண்ட ஆதிசத்தி
கந்தர நேர்குழற் கந்தரி வார்குழை
கஞ்ச மலர்வாழுங் கம்புகண்டி. (35)

பூரணி முத்தர் புராதனர் போற்றிடும்
பொங்கருட் புங்கவி சங்கரியே
நாரணி சீரணி யாரணி யாரணி
நாதாந்த மாது நலந்தருவாய். (36)

சமரிற்பொரு மசுரர்க்கிடி தனையொத்திடு தனிதப்புயல்
சாமளை கோமளை யாமளையே
தமரிற்றன சரணத்தருள் தமையற்புறு தனிதத்தவர்
சார்ந்தருள் கொள்ளுந் தயாநிதியே. (37)

கருணகரி கமலாசனி கலைமேவிய மதிதானெனும்
காமர் வதனக் கனங்குழையே
அருமாமணி தனைநேரொளி யருண்மேவிய திரைவாரிதி
அம்புச நேர்விழி யாரணங்கே. (38)

முத்தர்க்கருள் சித்தத்துறை முத்திக்கொரு வித்தொத்தவள்
மூல முதற்பொருள் நாரணியே
நித்தர்க்கருள் சத்திச்சிவை நிட்டைக்கமு தத்தைத்தரு
நேரிழை நீரணி கார்முகிலே. (39)

கங்காளி பரஞ்சோதி கனம்போலு மணஞ்சேர்குழல்
கந்துக முந்திய காரிகையே
சங்கேறுகை பங்கேருகை தந்தேரிடை சிந்தாமணி
தாயின் கமல சரண்போற்றி. (40)

கமலத்திதழ் கவினுற்றவள் கவிஞர்க்கருள் தருவித்தகி
காதம்பரி மாயி மாதங்கியே
சமரிற்பொரு மசுரர்க்கொரு சமனைத்தரு குமரிப்பரை
சாம்பவி பாதத்தைத் தாம்பணிவாம். (41)

அம்பிகை துர்க்கை யபிராமி சிவை
அந்தரி பொற்பதஞ் சிந்தைசெய்து
வெம்பிய பந்தப் பிணிமாற்றி யென்றும்
மேவுவீர் பூவின்கண் மேலீட்டால். (42)

பாரத்து வாச முனிவர் குலம்பெறு
பாங்குறு நேயரை யோங்கருளால்
சீரொத்துக் காத்திடும் சிந்தா மணிபதம்
சிந்தைவைத் தென்றும் செயம்பெறுவீர். (43)

கொண்ட லணிகொண்ட கோபுரஞ் சூழ்தரு
கோலத் தளிநிறை பாலத்தளி
அண்டர் பணிகொண்ட ஆதி சத்திபதம்
அன்புடன் போற்றி யருள்பெறுவீர். (44)

நாடு செழிக்கவும் நன்மழை பெய்யவும்
நாயகி யோங்கும் கருணையினல்
நீடிய அன்பர்கள் நேயந் தழைக்கவும்
நேரிழை சீர்பதம் வாழியவே. (45)

ஸ்ரீ துர்க்காம்பாள் தும்மி முற்றிற்றி.